## 20 வருடம் கழித்தும் இன்றும் வேலை செய்கிறது ‘கலைஞர் கலர் டிவி’!

# கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய உரிமையோடு உதயசூரியனுக்கு வாக்கு கேட்கிறோம்!

## வெள்ளக்கோவிலில் - அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. பரப்புரை!

**வெள்ளக்கோவில், ஏப். 7–**

**காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வெள்ளக்கோவில் பகுதியில் திமுக வேட்பாளரும் திமுக துணை பொதுச் செயலாளரும் அமைச்சருமான வெள்ளக் கோவில் சாமிநாதனுக்கு திமுக துணைப் பொதுச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வாக்கு கேட்டு பரப்புரை செய்தார்.**

இப்பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

“உங்களுடைய அன்பான ஆரவாரமான வரவேற்புக்கு மனமார்ந்த நன்றி. இந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள வெற்றி வேட்பாளர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களே… அமைச்சர் கயல்விழி அவர்களே, மாவட்டச் செயலாளர் இல. பத்மநாபன் அவர்களே… கழக நிர்வாகிகளே… முன்னணி செயல் வீரர்களே…

உச்சி வெயில் நேரத்திலும் உதயசூரியனுக்காக நீங்கள் திரண்டு நிற்பதை பார்க்கும்போது நமது வெற்றி நிச்சயம், நமது வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி சொல்வதைப் போல இந்தத் தேர்தல் என்பது தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.வுக்குமான தேர்தல், தமிழ்நாட்டுக்கும் டெல்லியில் இருக்கும் இந்துத்வ வாதிகளுக்குமான தேர்தல். கீழடியில் இருக்கக் கூடிய தமிழ்நாகரிகத்துக்கும் நாக்பூரில் நம் மீதுதிணிக்கப்படக் கூடிய ஆர்.எஸ்.எஸ். அடிப்படைவாதிகளுக்குமான தேர்தல் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டுடைய சுயமரியாதையை, உரிமைகளை தமிழ்நாட்டு பிள்ளைகளின் கல்வியை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்தத் தேர்தலில் நாம் பணியாற்ற வேண்டும், வாக்களிக்க வேண்டும்.

நாம் மக்களை சந்தித்து, உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கும்போது, மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டு மக்களை நாம் சந்திக்கிறோம். நமது அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தனது தொகுதிக்காக எத்தனையோ திட்டங்களை தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது ஆகட்டும், தளபதி முதல்வராக இருக்கும்போதாகட்டும் உங்களுக்காக போராடி பெற்றுவரக் கூடியவரைதான் உங்களுக்காக நிற்பவரைத்தான் அண்ணன் தளபதி அவர்கள் மறுபடியும் வேட்பாளராக இங்கே நிறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடிய எந்த வேட்பாளராக இருக்கட்டும், தேர்தல் முடிந்தால் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் அந்த கூட்டணி அப்படிப்பட்ட கூட்டணி. தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யும் கூட்டணி.

எடப்பாடியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்தவர், தன்னை வளர்த்த கட்சிக்கும் துரோகம் செய்தவர். யாரின் காலில் விழுந்து பதவி வாங்கினாரோ அந்த அம்மையாருக்கே கட்சியில் இடம் இல்லை. அவர் கூட இருந்த முன்னாள்



முதலமைச்சர் ஓபிஎஸ் இப்போது எங்கே இருக்கிறார்? தமிழ்நாட்டைக் காப்பாற்ற தளபதியால் தான் முடியும் என்று நம்மோடு இணைந்திருக்கிறார்.

**தன்னை வளர்த்த கட்சிக்கு துரோகம், தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்பவர் எடப்பாடி. விவசாயிகளுக்கு எதிராக பிஜேபி கொண்டுவந்த சட்டங்களுக்கு எதிராக எடப்பாடி வாய் திறக்கவில்லை. சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்களுக்கு எதிராக எடப்பாடி வாய் திறக்கலை.**

சாதாரண சாமானிய மக்களுக்காக திமுக காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப் பட்ட து 100 நாள் வேலைத் திட்டம். இன்று யாருக்காவது 100 நாள் வேலை கிடைக்குதா? பிஜேபி நாடாளுமன்றத்தில் 100 நாள் வேலை கிடைக்காமல் போவதற்கான எல்லா வேலைகளையும் செய்யக் கூட சட்டத்தைக் கொண்டுவந்தாங்க. உங்க கிராமத்துல இருக்குறவங்களுகு எத்தனை பேருக்கு வேலை கொடுக்கலாம், என்ன வேலை கொடுக்கலாம்னு அவங்க முடிவு பண்ணுவாங்களாம், எவ்வளவு வேலை கொடுக்கலாம்னும் அவங்கதான் முடிவு பண்ணுவாங்க. 100 நாள் வேலை திட்டத்துக்காக மாநிலங்களுக்கு கொடுத்த நிதியை ஒன்றிய அரசு குறைச்சுட்டாங்க. இப்படி அந்த திட்டத்தையே மூடக் கூடிய அளவுக்கு சட்டத்தை மோடி கொண்டுவர்றாரு.

இப்படியெல்லாம் பண்ணிட்டு தேர்தல் வரும்போது ஓட்டுக் கேட்க வருவாங்க. அப்போது அவரிடம் கேளுங்க, ‘100 நாள் வேலைத் திட்டத்தை மூடிவிட்டு இப்ப ஏன் ஓட்டு கேட்க வர்றீங்க’னு கேளுங்க. அப்படி ஒரு சட்டத்தை மோடி கொண்டுவந்தபோது வாய் திறக்காம அதை ஏற்றுக் கொண்டவர்தான் எடப்பாடி பழனிசாமி.

கிராமங்களில் இருக்கக் கூடிய மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் சட்டம் 100 நாள் வேலைக்கு எதிரான சட்டம். அந்த சட்டத்தின் பேர்ல இருந்த காந்தி பேரைக் கூட எடுத்துட்டு, ஜி ராம் ஜி அப்படினு பேர் வச்சிருக்காங்க. அதோட பேரு முழுசா தெரியாது, ஏன்னா அது இந்தியில இருக்கு. அதை படிச்சு பயனுமில்லை. இந்தி படிக்காம நம்ம பிள்ளைகள் பல நாடுகள்ல போய் வேலை பாத்துக்கிட்டிருக்காங்க.

அந்த சட்டம் வரும்போது வாய் திறக்காம ஏற்றுக் கொண்டு, இன்னிக்கு அதிமுக தேர்தல் அறிக்கையில வெளியிட்டிருக்காங்க. ‘நாங்க ஆட்சிக்கு வந்தா 150 நாள் வேலை கொடுப்போம்’னு சொல்லியிருக்காங்க. 100 நாள் வேலையையே காப்பாத்த குரல் கொடுக்க முடியாத நீங்க 150 நாள் வேலை கொடுக்கப் போறீங்களா?

அவங்களுக்குத் தெரியும். அதிமுகவோட தேர்தல் அறிக்கையை யாரும் படிக்க மாட்டாங்கனு அவங்களுக்கே நல்லா தெரியும். ஏன்னா 2016இல செல்போன் கொடுக்குறேன்னு சொன்னாங்க. யாருக்காவது கொடுத்தாங்களா? ஒருத்தருக்காவது கிடைச்சுதா? ஒருத்தருக்கும் கொடுக்கலை.

அவர் நம்மைப் பார்த்து தேர்தல் அறிக்கையில் சொல்வதையெல்லாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நிறைவேற்ற மாட்டார்னு சொல்றாரு. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி எல்லாவற்றையும் நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர்.

வண்ணத் தொலைக்காட்சி பெட்டி தருகிறேன் என கலைஞர் சொன்னாரு. அப்போது தர முடியாதுனு எதிர்க்கட்சிக்காரங்க சொன்னாங்க. ஆனா தலைவர் கலைஞர் கொடுத்தாரு. அது இன்றுவரை வேலை செய்யுது. கிட்டத்தட்ட இருபது வருசமா கெட்டுப்போகாத டிவி உலகத்துலயே இருக்குன்னா அது கலைஞர் கொடுத்த டிவிதான். இப்ப வாங்குற டிவியெல்லாம் 3 வருஷம் கூட வரமாட்டேங்குது. ஆனா தலைவர் கலைஞர் எப்படி தமிழ்நாட்டு மக்களின் மனதிலெல்லாம் இடம் பிடித்திருக்கிறாரோ, அதேபோல அவர் கொடுத்த டிவி அந்த வீடுகளில் இருக்கிறது.

மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை தருவேன் என தளபதி சொன்னார். அதை நிறைவேற்றிக் காட்டியவர்தான் முதல்வர் ஸ்டாலின். இந்த தேர்தல் முடிந்து மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்ததும், மகளிர் உரிமைத் தொகை மாதம் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அடுத்து, இங்கே இருக்கக் கூடிய விவசாயிகளுகு இலவச மின்சாரத்தை கொண்டுவந்தது தலைவர் கலைஞர் அவர்கள்.

இப்போது எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத மோட்டார்கள் நம்முடைய அடுத்த ஆட்சியில் எவ்வித கட்டணமும் இல்லாத மோட்டார்களை 20 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவேன் என உறுதியளித்திருக்கிறார்.

கல்லூரியில் போய் படிக்கக் கூடிய நம் வீட்டுப் பிள்ளைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருந்தோம். அடுத்து நாம் மீண்டும் ஆட்சி அமைத்தவுடன் அது 1500 ஆக உயர்த்தி வழங்கப்படும். மாணவர்களுக்கு லேப்டாப் கொடுத்துக்கொண்டிருந்தார்கள் ஒரு காலத்தில். அதை நிறுத்தியது எடப்பாடி பழனிசாமி. அதை மறுபடியும் நம் இளைஞர்களுக்கு இளம்பெண்களுக்கு கொடுத்தது நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அடுத்த முறை ஆட்சிக்கு வந்ததும் 35 லட்சம் இளைஞர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும்.

காலை உணவுத் திட்டம் இப்போது 5 ஆம் வகுப்பு வரைதான். அடுத்து ஆட்சிக்கு வந்ததும் 8 ஆம் வகுப்புவரை உயர்த்தி வழங்கப்படும்.

அடுத்து முக்கியமானது… என்னது? எட்டாயிரம் இல்லத்தரசி கூப்பன். மத்தவங்க சொல்றாங்க, உங்க வீட்ல ஃப்ரிட்ஜ் இருக்கா பரவால்ல, நானும் ஃபிர்ஜ்ட் கொடுப்பேன் வாங்கி வச்சுக்கோனு.

**ஆனால், நம்முடைய முதலமைச்சர் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய வீட்டில் ஃபிரிட்ஜ் இருந்தால் வாஷிங் மெஷின் வாங்கிக்கோங்க. வாஷிங் மெஷின் இருந்தால் கிரைண்டர் வேணுமா வாங்கிக்கோங்க. நான் எட்டாயிரம் ரூபாய்க்கு வவுச்சர் கொடுக்குறேன். உங்களுக்கு என்ன வேணுமோ என்ன தேவையோ அதை வாங்கிக் கொள்ளுங்கள், என தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பை உங்களுக்கு தந்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**

இந்த பகுதியிலே நிறைய சாதனைகளை செய்திருக்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் உங்களுக்காக நிறைவேற்றிய சாதனை பெரிய பட்டியலாக இருக்கிறது.

வட்டமலை காரையோடை திட்டம் 1975 இல் தலைவர் கலைஞரால் கொண்டுவரப்பட்டது. இந்த ஐந்து வருடத்தில் மூன்று முறை அதற்கு பரம்பிகுள ஆழியாறு நீர் தேக்கத்தில் இருந்து அதற்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டது. வரும் காலங்களில் இதற்கு நிரந்த தீர்வு காணும் வகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்படும்.

காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் 1996 இல் தலைவர் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. மேலும் அமராவதி ஆற்றில் இருந்து 3 MLD தண்ணீர் கொண்டுவர 13 கோடி ரூபாய் செலவில் பணிகள் முடியும் தருவாயில் இருக்கிறது.

நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே தான் அருந்ததியருக்கு 3% இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்தார். இப்போது நம்முடைய தளபதி அண்ணன் அவர்கள் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் வழியாக ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு திராவிட மாடல் அரசு தொழில் தொடங்கிட மூல தன மானியத்துடன் கடன் உதவி வழங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் பலர் பயன்பெற்று வருகின்றன.

இப்பகுதியிலே நெசவாளர்கள் இருக்கிறீர்கள். கைத்தறி நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை முதியோருக்கு 1,200 ரூபாயில் இருந்து 2 ஆயிரமாக நெசவாளர்களுக்கு உதவித் தொகையை அதிகமாக்கியிருகிறார்கள்.

கைத்தறியை நவீனமாக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. அதனால் 90% மானியத்தோடு கைத்தறிகளை நவீனமாக்க அடுத்து வருகிற திராவிட மாடல் அரசு உங்களோடு உறுதுணையாக நிற்கும்.

ஜவுளித் தொழிலில் கோவை, திருப்பூரில் நிறைய தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்காக 25 ஆயிரம் தொழிலாளர்கள் தங்கும் வகையிலே விடுதிகள் கட்டித் தரப்படும். இப்படி எத்தனையோ திட்டங்களை செய்து முடித்து அந்த உரிமையோடு உங்களிடம் வந்து உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

மற்றவர்கள் நடுவில் நிறைய பேர் வரலாம். அதெல்லாம் வீணாய் போகிற ஓட்டு. உங்களுக்கே தெரியும். உங்கள் வாக்குகளை விரயமாக்காதீர்கள்.

**உங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். யார் பாதுகாப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியும். நம்முடைய முதல்வர் அறிவித்திருக்கிறார்… படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல… படித்து முடித்து வேலை தேடக் கூடிய பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதற்கான பயிற்சி அளிப்போம். அந்த பயிற்சி அளிக்கக் கூடிய ஆறு மாதங்களில் அவர்களுக்கும் மாதம் 1,500 ரூபாய் வழங்குவோம் என்று தாயுள்ளத்தோடு வழங்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.**

அதனால் உங்களுக்காக பாடுபடக் கூடிய ஆட்சி. தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம் திமுக. தலைவர் கலைஞர் அவர்களின் வழியிலே அண்ணன் தளபதி அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அ.தி.மு.க. என்பது அண்ணா தி.மு.க. ஆகவும் இல்லை, அம்மா தி.மு.க. ஆகவும் இல்லை. அது அமித் ஷா தி.மு.க.வாக மாறியிருக்கிறது. அவர்கள் யார் என்று அடையாளம் கண்டு கொண்டு,. நம்முடைய உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து நம்முடைய அமைச்சரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.



சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர். மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன்அஸ்தம்பட்டி பகுதிக்கு உட்பட்ட 6வது கோட்டத்தில் வீடு, வீடாகச் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் வாழப்பாடி , அயோத்தியா ப்பட்டணம் ஆகிய ஒன்றியங்களில் இருந்து அ.தி.மு.க, பா.ம.க , அ.ம.மு.க, ஆகிய கட்சிகளில் இருந்து 1000 பேர் அக்கட்சியில் விலகி தேர்தல் மண்டல பொறுப்பாளரும், அமைச்சருமான எ.வ.வேலு முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர். சிவலிங்கம், எம்.பி., அமைச்சர் இரா.ராஜேந்திரன், டி.எம். செல்வகணபதி எம்.பி., தே. மலையரசன் எம்.பி., எம்.எல்.ஏ. பரந்தாமன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் வடக்கு ஒன்றியத்தில் கழக வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. குருவி நாயனப்பள்ளி, சின்னமட்டாரப்பள்ளி, வரட்டனப்பள்ளி, உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு இணையாக தற்பொழுது எந்த தலைவரும் இல்லை. அவர் கடந்த 5 ஆண்டுகள் பொற்கால ஆட்சி வழங்கியுள்ளார். என கழக அரசின் சாதனைகளை கூறி பரப்புரை மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் நாகராஜ், கதிரவன், ராஜேந்திரன், தினேஷ் ராஜன், ஜெயேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானனோர் உடன் இருந்தனர்



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி கரகூர் கிராமத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கிய கழகத் தலைவர்,முதலமைச்சருக்கு நன்றி கூறி, அக்கிராமத்தின் பெண்கள் வாக்கு சேகரிக்கச் சென்ற கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில் குமாருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர்.